***கவனிக்க.-*** *2008.05.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1553 - 2008 ජූනි 06 වැනි සිකුරාදා - 2008.06.06

*1553 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## *பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்*

***(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)***


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 574 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 576 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, யூன் 13 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, மே 30 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிட்ட கம்பனியின் பதிவாக்கல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது.

*கம்பெனியின் பெயர்* : வை பெ(எப்) சன் (தனியார்) வரையறுக்கப்பட்டது.

*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 63919

*பதிவு செய்த திகதி* : 25.04.2008

*கம்பனியின் விலாசம்* : இல. 69, திம்பிரிகஸ்ஸாய ரோட், கொழும்பு 05

ஜேஎன்ஏ மனேஜ்மன்ட் சிஸ்டம்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்டது.
கம்பனிச் செயலாளர்.

6- 02

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

பிரிவு 9 (1) இன்கீழ் அறிவித்தல்

*கம்பெனியின் பெயர்* : றிலெக்ஸ் எஸ். பி. ஏ. (பிறைவேற்) லிமிட்டெட்.

*கம்பனியின் இலக்கம்* : பீவீ 64045

*பதிவு செய்யப்பட்ட விலாசம்* : 449, 'பாரத்த', கோஸ்ஸின்ன, கனேமுல்ல

கம்பனிச் செயலாளர்.

6- 08

---

## வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

மொசெட்டி இன்டநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற கம்பனி 2008 மார்ச் 24 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது என்ற விபரம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பெனியின் பெயர்* : மொசெட்டி இன்டர்நஷனல் (பிறைவேற்) லிமிட்டெட்.

*கம்பனியின் இலக்கம்* : பீவீ 63532

*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்* : 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2008, மார்ச் 24

பணிப்பாளர்கள் சபைக் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2008, எப்பிறல் 23

06- 23/1

---

## வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

லொஜிவிஸ் என். டபிள்யூ. (பிறைவேட்) லிமிட்டெட் என்ற கம்பனி 2008 மார்ச் 24 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது என்ற விபரம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பெனியின் பெயர்* : லொஜிவிஸ் என். டபிள்யு (பிறைவேற்)

*கம்பனி இலக்கம்* : பீவீ 63537

*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்* : 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2008, மார்ச் 24

பணிப்பாளர்கள் சபைக் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2008, எப்பிறல் 23

6- 23/2

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளுக்குமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தனியார் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி 2008, மே 02 ஆந் திகதி கூட்டிணைக் கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

*கம்பெனியின் பெயர்* : செக்கியோ சிஸ்டம்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

*கம்பனி இலக்கம்* : பீவீ 63978

*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்* : இல. 36ஏ, தக்ஷிணாராம வீதி, கல்கிஸ்சை.

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

எஸ்பி கோப்பரேட் கொன்சல்ட்ரன்ஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்
செயலாளர்கள்.

6- 27

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளுக்குமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தனியார் பொறுப்பு

வரையறுக்கப்பட்ட கம்பனி 2008, ஏப்பிறல் 24 ஆந் திகதி கூட்டிணைக் கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

கம்பெனியின் பெயர் : லைவ் கெல்த் கெயா (பிறைவேற்) லிமிட்டெட்

கம்பனி இலக்கம் : பீவீ 63897

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 241, 2 ஆவது மாடி, ஹெவலொக் வீதி, கொழும்பு 06.

சபையின் கட்டளைப் பிரசாரம்

எஸ்பி கோப்பரேட் கொன்சல்ட்ரன்ஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

6- 28

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) பிரிவின் படி கீழ்க்கண்ட கம்பனி 2008 ஆம் வருடம் சித்திரை மாதம் 08 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

கம்பெனியின் பெயர் : ஒஸ்லங்கா இன்றநேசனல் கொமடிட்டீஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

கம்பனியின் இலக்கம் : பீவீ 63960

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2008 ஆம் வருடம் சித்திரை மாதம் 8 ஆந் திகதி

பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 135/1, பன்சல வீதி, மஹரகம

சபையின் கட்டளைப் பிரகாரம்

செயலாளர்கள்.

6-41

---

## பொது அறிவித்தல்

தனியார் கம்பனியாக மாற்றப்பட்டதன் விளைவான பெயர் மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 11 (5) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு, இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருக்கும் ஹேலீஸ் இலெக்ட்ரோனிக்ஸ் (ரிட்டேய்லிங்) லிமிட்டெட் (கம்பனி இலக்கம் என் (பிபீஎஸ்) 764), அதிகாரசட்டத்தின் 29 ஆவது பிரிவுக்கு அமைய, 2008, ஏப்பிறல் 25 ஆந் திகதி முதல் ஒரு தனியார் கம்பனியாக மாற்றப்பட்டுள்ளது என்பதையும் அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுக்கு அமைய, கம்பனியின் பெயர் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது என்பதையும் இத்தால் அறிவிக்கின்றோம் :-

ஹேலீஸ் இலெக்ட்ரோனிக்ஸ் ரிட்டேய்லிங் (பிறைவேற்) லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் லிமிட்டெட்.
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10
2008, மே 07

6-56

## பொது அறிவித்தல்

தனியார் கம்பனியாக மாற்றப்பட்டதன் விளைவான பெயர் மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 11 (5) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு, இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருக்கும் ஹேலீஸ் இலெக்ட்ரோனிக்ஸ் (லைட்டிங்) லிமிட்டெட் (கம்பனி இலக்கம் என் (பிபீஎஸ்) 763), அதிகாரசட்டத்தின் 29 ஆவது பிரிவுக்கு அமைய, 2008, ஏப்பிறல் 25 ஆந் திகதி முதல் ஒரு தனியார் கம்பனியாக மாற்றப்பட்டுள்ளது என்பதையும் அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுக்கு அமைய, கம்பனியின் பெயர் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது என்பதையும் இத்தால் அறிவிக்கின்றோம் :-

ஹேலீஸ் இலெக்ட்ரோனிக்ஸ் லைட்டிங்
(பிறைவேற்) லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2008, மே 07.

6-54

---

## பொது அறிவித்தல்

தனியார் கம்பனியாக மாற்றப்பட்டதன் விளைவான பெயர் மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் (அதிகாரச்சட்டம்) 11 (5) ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு, இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருக்கும் ஹேலீஸ் இலெக்ட்ரோனிக்ஸ் (மனுபக்சரிங்) லிமிட்டெட் (கம்பனி இலக்கம் என் (பிபீஎஸ்) 234), அதிகாரசட்டத்தின் 29 ஆவது பிரிவுக்கு அமைய, 2008, ஏப்பிறல் 25 ஆந் திகதி முதல் ஒரு தனியார் கம்பனியாக மாற்றப்பட்டுள்ளது என்பதையும் அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுக்கு அமைய, கம்பனியின் பெயர் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது என்பதையும் இத்தால் அறிவிக்கின்றோம் :-

ஹேலீஸ் இலெக்ட்ரோனிக்ஸ் மனுபக்சரிங் (பிறைவேற்) லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2008, மே 07.

6- 55

# ஏல விற்பனைகள்

## மக்கள் வங்கி – ஹைட்பார்க் கோணர் கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி எனும் பிரிவின்கீழ் விற்பனை*

**காணி (கோட்டே நகர சபை எல்லைகளுக்குள் நுகேகொடை, கங்கொடவிலவில் அமைந்துள்ள "கனேலந்த" என அழைக்கப் படுவது) அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ.0றூ. 2.5பே.)**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.-** ஹைலெவல் வீதியில் நுகேகொடையிலிருந்து கங்கொடவில நோக்கி சென்று கம்சபா சந்தியை கடந்து முன்னோக்கி செல்லும்போது வலப்பக்கத்திலுள்ள "கார்கில்ஸ் புட்சிட்டி" வியாபாரத்தளத்திற்கு அண்மையில் ஹைலெவல் வீதியை நோக்கி இவ்வாதனம் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2008, யூன் 28 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.-** 2004.07.01 .ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2004.06.22 ஆந் திகதிய 'தினமின', 'டெய்லி நியூஸ்' மற்றும் 'தினகரன்' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-** வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்துவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 % (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்..

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 1, டியூக் வீதி, இல. 11, மேற்கு வலய அலுவலகம் I, மக்கள் வங்கி, உதவிப் பொது முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இலக்கங்கள் : 2387068, 2393678, 4-717008 தொலைநகல் இல. : 4-717009

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட எஞ்சிய தொகை 90% (தொண்ணூறு வீதம்) ஐ 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை.
தொலைபேசி இல. 011-5756356

6-76

---

## மக்கள் வங்கி – நகர மத்தி கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி எனும் பிரிவின்கீழ் விற்பனை*

**கொள்ளுப்பிட்டி, நெல்சன் ஒழுங்கையில் அமைந்துள்ள காணி அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை (காணியின் விஸ்தீரணம் : 0ஏ.0றூ.3.04பே.)**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.-** கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து தர்மபால வீதியில் முன்னோக்கி சென்று லிபர்ட்டி சுற்று வட்டத்தை கடந்து ஏறக்குறைய 25 மீற்றர் செல்ல இடப்பக்கத்திலுள்ள கெமருன் இடத்தில் பிரவேசித்து ஏறக்குறைய 100 மீற்றர் செல்ல இடப்பக்கத்தில் வரும் காமன் வீதி வழியே ஏறக்குறைய 50 மீற்றர் சென்று ஸ்ரீ தர்ம கீர்த்தியாராம வீதியில் பிரவேசித்து முன்னோக்கி ஏறக்குறைய 100 மீற்றர் செல்ல வலப்பக்கத்தில் அமைந்துள்ள நெல்சன் ஒழுங்கையை எதிர்கொள்வீர்கள். அவ் ஒழுங்கையில் ஏறக்குறைய 25 மீற்றர் செல்ல இடப்பக்கத்திலுள்ள வீதியில் வலப்பக்கத்தில் வீதியை எல்லையாகக் கொண்டு, வரிமதிப்பு இல. 39/54 ஐக் கொண்ட முதல் வீடாக அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2008.06.29 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.-** 2007.10.19 .ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007.10.12 ஆந் திகதிய 'தினமின', 'டெய்லி நியூஸ்' மற்றும் 'தினகரன்' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-** வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% (பத்துவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 % (இரண்டரை வீதம்) ;

(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 1, டியூக் வீதி, இல. 11, மேற்கு வலயம் I, மக்கள் வங்கி, உதவிப் பொது முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இலக்கங்கள் : 2393678, 2387068 தொலைநகல் இல. : 2435977

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட எஞ்சிய தொகை 90% (தொண்ணூறு வீதம்) ஐ மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% தண்டப் பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற
ஏலதாரர் மற்றும் விலைமதிப்பிடுநர்.

11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை.
தொலைபேசி இல. 011-5756356

6-75

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. – வத்தளை கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**பெறுமதிமிக்க ஆதனம் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரி பற்று, களனி, சிங்ஹாரமுல்லவில் அமைந்துள்ளதும் "பொல்கந்தன்லியத்த" என அழைக்கப்படும் காணியின் உள்ளிருந்தும் புறமுமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யு. டி. எஸ். டீ. சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999, திசெம்பர் 5 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4816 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2டி என அடையாள மிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும்) அதன்கண் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 17.6 பேர்ச்சுக்கள்)**

(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிச எஸ். எஸ். ஹல்லொலுவ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2004, திசெம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 1125 மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். டீ. அல்விஸ் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2003, நவெம்பர் திகதியிடப்பட்ட முறி இல. 951 ஆகியவற்றின்மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ள கடப்பாடுடைய வர்களான நிமாலி சந்தியா ஓபாத்த மற்றும் ஓபாத்த கங்கானம்கே தர்மதாச ஆகியோரால் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)

ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2008, யூன் 25 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2008, மார்சு 28 .ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2008, ஏப்பிறல் 22 ஆந் திகதிய ''ஐலண்ட்'', "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% (பத்துவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 % (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனையில் உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் பீஎல்சீ இற்கு செலுத்த வேண்டும்.

எஞ்சிய தொகை 90% (தொண்ணூறு வீதம்) ஐ மேற்குறிப்பிடப் பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்துவீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, 'எச். என். பி. கோபுரங்கள்', ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, சிரேட்ட முகாமையாளர்'' இடம் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இலக்கங்கள் 011-2661815, 2661816

ரஞ்சித எஸ். மஹநாம
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹநாம டிரைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல. 2863121

6-33/2

**ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. – வத்தளை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் (ஆனால், கொழும்பு பதிவு பிரிவிற்குள்), அளுத்குறு கோறளை, ராகம்பற்று, வத்தளை பிரதேச சபையின் ஹெந்தளை உப அலுவலகத்திற்குள் ஹெந்தளையில் அமைந்துள்ளதும் புவக்வத்த வீதி வரிமதிப்பு இல. 27ஏ ஐக் கொண்டதும் 'தோர்ன்வுட் பார்க்' இன் பாகம் என அழைக்கப்படும் காணியின் உள்ளிருந்தும் புறமுமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜீ. குணதிலக்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 1995, ஒற்றோபர் 15 ஆந் திகதியிடப் பட்ட வரைபடம் இல. 134/1995 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 147 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும்) அதன்கண் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 18.80 பேர்ச்சுக்கள்)**

*(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிச எஸ். எஸ். ஹல்லொலுவ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007, சனவரி 30 திகதியிடப்பட்ட முறி இல. 1899 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவரான பயகாலோகே நியோமலன் கிரேஸியஸ் அணிலால் பெர்ணான்டோவினால் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி இற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2008, யூன் 25 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்காக.**- 2008, மாச்சு 28 .ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2008, ஏப்பிறல் 23 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% (பத்துவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 % (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனையில் உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் பீஎல்சீ இற்கு செலுத்த வேண்டும்.

எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்துவீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இலக்கம் 479, 'எச். என். பி. கோபுரங்கள்', ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, சிரேட்ட முகாமையாளர் (அறவீடுகள்)" இடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 011-2661815, 2661816

ரஞ்சித எஸ். மஹநாம
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹநாம டிரைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல. 2863121

6-33/1

---

**பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீ. எல். சி.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை**

**அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் குசுமன் சிறிவர்தன அவர்களால் வரையப்பட்ட, 2002 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 23 ஆந் திகதியிடப்பட்ட, 707/2002 இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 134 எனக் குறிப்பிடப்பட்டு, பிரிக்கப்பட்டதும், குறித்துரைக்கப்பட்டதுமான, தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், கிருவ பத்து தெற்கு, கஹவத்தையில் அமைந்துள்ள தெம்பிலிகஹ கொறட்டுவ அல்லது தமனியகஹவத்த, கந்தரகெதர மற்றும் மனகெஹன என்றழைக்கப்பட்ட ஒன்றிணைந்த காணி. அங்குள்ள மரங்கள் உட்பட அனைத்தும் உள்ளடங்கலாக மற்றும் குறிப்பிட்ட வரைபடத்தில் பாதை உரிமை என அடையாளமிடப் பட்டதும்.**

**(காணியின் விஸ்தீரணம் : 00ஏ. 00றூ. 13.36 பே.)**

**காணிக்குச் செல்லும் வழி.**- காணியைச் சென்றடையவென பெலியத்த நகர மத்தியிலிருந்து வலஸ்முல்ல வீதி வழியாக ஒரு கிலோ மீற்றர் மைல்கள் வரை ஒரு கிலோ மீற்றர் பயணம் செய்த பின், தொடர்ந்தும் 400 மீற்றர்கள் செல்லவும். இடதுபக்கம் திரும்பி கிறவல் றோட்டில் 800 மீற்றர்கள் சென்றதும் இடதுபக்கம் திரும்பி 30 அடி அகலமான வீதியில் 400 மீற்றர்கள் செல்லவும்

*(மாத்தறை பிரசித்த நொத்தாரிசு P. G. C. நாணயக்காரவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, யூன் 21 ஆந் திகதியிடப்பட்ட 8613 ஆம் இலக்க ஈட்டு உறுதிக் கடன் பத்திரத்தின் பிரகாரமான கொடுப்பனவைச் செலுத்தத் தவறிய லங்கா கீகனகே நிஷாந்த பிரேமகுமாரவினால் ஈடுவைக்கப்பட்ட காணி.)*

*(பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சிக்கு (முன்னர் பான் ஏஷியா பாங் லிமிட்டெட் மற்றும் பான் ஏஸியா பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டெட் என அழைக்கப்பட்டு வந்தது) ஈடுவைக்கப்பட்டு மீளளிக்கப்படாத சொத்து.)*

பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5 % ;
(4) 75,000 ரூபாவுக்கு மேற்படாத வகையில் மொத்த விளம்பரச் செலவில் 50% ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

இத்தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு தயவு செய்து 2005 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி வெளியான "சிலோன் டெயிலி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" செய்திப் பத்திரிகைகளையும், 2008 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானி அறிவித்தலையம் பார்வையிடவும்.

மேலதிக விபரங்கள், உறுதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவுணங்களை, "சிரேஷ்ட முகாமையாளர், சட்டப் பிரிவு, பான் ஏஷியா பாங்கிங் கொப்பரேஷன் பீஎல்சி, 450, காலி வீதி, கொழும்பு 3" எனும் முகவரியில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இலக்கங்கள் 2565573, 2565565

சொக்மன் அன்ட் சமரவிக்ரம
அரசாங்க அங்கீகாரம் பெற்ற ISO 9001 : 2000 இலக்க தராதரமுடைய
ஒரேயொரு பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணி செயல் முகவர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி | கொழும்பு 05 |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபெசி : 011-2502680, 2585408 |
| தொலை/ஃபக்ஸ் : 081-2224371 | தொலை/ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokmankandy@samera1892.com |

6-31

**மக்கள் வங்கி - லுணுகலைக் கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால்*
*திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க*
*மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் விற்பனை*
*அறிவித்தல்*

**லுணுகலை நகரத்துக்கருகிலுள்ள "அகலபாஸ்வத்த" என அழைக்கப்படும் காணியும் கட்டடமும் அனைத்தும் ஏலவிற்பனை**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் 2008.06.26 ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

**அட்டவணை**

பதுளை மாவட்டத்தில் பசறைப் பகுதியில் லுணுகலை நகரத்தின் அருகில் அமைந்துள்ள "அகலபாஸ்வத்த" என அழைக்கப்படும் அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திரு. எம். கே.சி. பிரேமச்சந்திர அவர்கள் 1987 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி தயாரித்த 940 ஆம் இலக்க வரைபின் துண்டு இலக்கம் 07 உம் 1287 வரைபின் துண்டு இலக்கம் பீ எனக் குறிப்பிடப்பட்டுள்ள 10 பேர்ச்சர்ஸ் காணி இரண்டும், கட்டடமும் அனைத்துமாகும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 1996.10.04 ஆந் திகதி தினமின பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பிரேரணை அறிவித்தலைப் பார்க்கவும்.

**ஆதனத்தை அடைதல்.**- பதுளை - பிபில பாதையில் லுணுகலை நகரைத் தாண்டி 300 யார் தூரம் சென்றதும் வலது புறமாகக் காணப்படும் பல்லேபங்குவ கிராமத்திற்குச் செல்லும் பாதையில் 05 யார் சென்றதும் பாதையின் இடது பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை முடிவடைந்ததும் வெற்றிபெற்ற கொள்வனவாளர் கீழ்க்காணும் முறையில் பணம் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% மும் ;
(2) உள்ளூர் அதிகார சபையின் வரிக்காக உள்ளூராட்சி அதிகார சபைக்கு 1% மும் ;
(3) ஏலதாரரின் தரகுப் பணமாக விற்பனை விலையில் 2.5 % மும் ;
(4) இலிகிதர் மற்றும் அறிவிப்பாளர் கொடுப்பனவாக ரூபா 500 உம் ;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணமும் ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணமும் ஆகும்.
(7) கொள்வனவு விலையில் மிகுதி 90% ஆன பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பதுளை மக்கள் வங்கியின் பதுளைப் பிராந்திய பிரதான அலுவலகத்தில் பொது முகாமையாளர் அவர்களிடம் செலுத்ததல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் : 055-2222165/2223067/2223068
பெக்ஸ் இலக்கம் : 055-2222361

உரிமை, உறுதிப்பத்திரம் மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலே குறிப்பிட்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள பணம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தியுள்ள கொள்வனவு விலையில் 10% ஆன பணம் திருப்பி செலுத்தாமலிருக்கவும், மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

டப்ளியு. ஜயதிலக,
(சமாதான நீதவான்),
பகிரங்க ஏலதாரர், மதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 48/1 கலுகல்பிடிய,
பதுளை,
தொலைபேசி இல. : 055-2230846

6-03

---

## செலான் வங்கி பி. எல். சி. - பண்டாரவளை கிளை

1990 ஆம் ஆண்டு வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் 4 ஆம் இலக்க சட்டத்தின் (விஷேட சரத்துக்கள்) 04 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

### காணி ஆதனங்கள் ஏலவிற்பனை

*("கடன் பட்டோர்" என்ற வகையில் கொழும்பு 5 இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள 10.10.1986 ஆந் திகதியிடப்பட்ட பதிவு இல. N (PVS) 2963 ஐக் கொண்டுள்ள 1982 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகிய குளோப் பிளென்டர்ஸ் அன்ட் பொட்லர்ஸ் (பிறைவேட்) கம்பனிக்கு வழங்கப்பட்ட வசதிக்காக செலான் வங்கி PLC க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)*

### முதலாவது ஏல விற்பனை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், கும்பலவெல கோரளை டெடகின்த D. R. O. பிரிவில் F. V. P. 27க்குட்பட்ட பல்லேபேருவ, பிந்துனுவெவ வில் அமைந்தள்ள அனுமதிபெற்ற நிலஅளவையாளர் யு. என். பி. விஜேவீர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1991, யூன் 5 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 1541 இல் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்ட (அனுமதிபெற்ற நில அளவையாளர் எச். டப்ளியு. முனசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. 50 இல் துண்டு 1 இன் உப பிரிவு என்ற வகையில்) கெஹெல்வத்த என்றழைக்கப்படு கின்ற சகலதும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட அங்கு காணப்படுகின்ற சகலவற்றுடன் பதினேழு தசம் ஒன்பது பேர்ச் (0ஏ. 0றூ. 17.9பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள காணித்துண்டு பதுளை காணிப்பதிவ கத்தில் J114/132 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பல்லேபேருவ பின்துனுவெவவில் அமைந்துள்ள அத்துடன் மேற்கூறப்பட்ட நிலவரைப்பட இல. 1541 இல் துண்டு 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ள சகலதும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட கெஹெல்வத்த என்றழைக்கப்படுகின்ற காணி அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் பதினேழு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 17.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் பதுளை காணிப்பதிவகத்தில் J114/133 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பல்லேபேருவ, பின்துனுவெவவில் அமைந்துள்ள மேற்கூறப்பட்ட நிலவரைப்பட இல. 1541 இல் காணித்துண்டு 3 எனக் குறிப்பிடப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட கெஹெல் வத்த என்றழைக்கப்படுகின்ற காணித்துண்டு ஒன்று தசம் ஆறு பேர்ச் (0ஏ.0றூ.1.6பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் பதுளை காணிப் பதிவகத்தில் J 114/133 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை அதே இடதில் 2008, யூலை 01 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** பண்டாரவளை நகரிலிருந்து பதுளை வீதி ஊடாக இந்தக் காணியைச் சென்றடைவதற்கு சமார் 2.25 கீ. மீ. தூரம் சென்றதும் கற்குழி இல. 20/3 அருகாமையில் இந்த வீதியின் வலது பக்கமாக அமைந்துள்ளது.

### இரண்டாவது ஏலவிற்பனை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் (தற்பொழுது அளுத்குரு கோரளையின் ரைகம்பத்துவின் வத்தளையிலுள்ள தெலுங்கபாத்தையில் அமைந்துள்ள தொட்டேவத்த மற்றும் தொட்டேகும்புர என்றழைக்கப் படுகின்ற காணியின் அனுமதிபெற்ற நிலஅளவையாளர். டி. டபிள்யு. குணரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 24.12.1980 திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 2175 இல் குறிப்பிடப்பட்டுள்ள 19பி எனக் குறிப்பிடப்பட்டுள்ள சகலதும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் இருபத்தேழு பேர்ச் (0ஏ.0றூ.27பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் கொழும்பு மாவட்ட காணிப்பதிவகத்தில் B777/85 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வத்தளையிலுள்ள தெலங்கபாத்தையில் அமைந் துள்ள தொட்டேவத்த மற்றும் தொட்டேகும்புர என்றழைக்கப்படுகின்ற காணியின் மேற்கூறப்பட்ட நிலவரைப்பட இல. 2175 இல் 19C எனக் குறிப்பிடப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு இருபத்தெட்டு தசம் சைபர் ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.28.05பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் B777/86 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நிலவரைப்பட இல. 1046 இல் துண்டு 54 மற்றும் 55 மற்றும் நிலவரைப்பட இல. 2175 இல் 19 E எனக்குறிப்பிடப்பட்ட காணியைச் சென்றடைவதற்குரிய வீதியை முழுமையாகவும் சுயேட்சையாகவும் பயன்படுத்துவதற்குரிய உரிமை கீழ்கண்டவாறு விபரிக்கப்படுகின்றது:-

(1) வத்தளையில் தெலங்கபாத்தையில் அமைந்துள்ள தொட்டே வத்த மற்றும் தொட்டேகும்புர என்றழைக்கப்படுகின்ற காணியின் அனுமதிப்பெற்ற நில அளவையாளர் ஏ. ஸ்ரீகாந் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1969, ஏப்பிறலில் 5, 6 மற்றும் 7 ஆம் திகதியிடப்பட்ட மேற் துண்டு 54 எனக் குறிப்பிடப் பட்டுள்ள சகல காணித்துண்டும் ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் கொழும்பு காணிப் பதிவகத்தில் B766/236 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2) வத்தளையிலுள்ள தெலங்கபாத்தையில் அமைந்துள்ள தொட்டே வத்த மற்றும் தொட்டேகும்புர என்றழைக்கப்படுகின்ற காணியின் மேற்கூறப்பட்ட நிலவரைப்பட இல. /1046 இல் துண்டு 55 எனக் குறிப்பிடப்பட்டுள்ள (30 அடி அகலத்திற்கான வீதி ஒதுக்கத்துடன்) சகல காணிகளும் ஒரு றூட் மற்றும் இருபத்திநான்கு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 1றூ. 24.5 பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் கொழும்பு காணிப் பதிவகத்தில் B766/237 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள காணியை அதே இடத்தில் 2008 யூலை 03 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நான் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**.- கொழும்பு - நீர்கொழும்பு வீதியில் சுமார் 2.3 கி. மீ. சென்று செலான் வங்கிக்கு முன்னாலேயே கற்குழி வீதிக்கு இடது புறமாகத் திரும்பி இக்காணியைச் சென்றடைய முடியும். இந்த வீதியில் சுமார் 100 மிற்றர் சென்று வலது புறமாகத் திரும்பி வீதி ஒதுக்கத்தின் முடிவிலுள்ள துண்டு 19 சீ மற்றும் சுமார் 30 மீற்றர் தூரத்தில் வலது புறமாகவுள்ள இடதுபுறத்தில் துண்டு 19B1 இக்காணியை நோக்கிச் செல்கின்ற வீதி ஒதக்கத்தைச் சென்றடைவதற்கு மேலும் சமார் 100 மீற்றர் செல்லவும்.

### மூன்றாவது ஏலவிற்பனை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்திலுள்ள மாரவில பதிவுப் பிரதேசத்திற்குட்பட்ட பிட்டிகல் கோரளை (தெற்கு) ஒத்தார பலாத்தவில் லுனுவில கிராமத்தில் அமைந்துள்ள அனுமதிபெற்ற நில அளவையாளர் டி. சி. எஸ் பெர்னான்டோ என்பரால் தயாரிக்கப்பட்ட 14.12.1981 திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 267 இல் துண்டு 73 எனக் குறிப்பிடப்பட்டுள்ள கிரிமட்டியான எஸ்டெட்டிலிருந்தும் அதற்குப் புறம்பாகவுமுள்ள சகலதும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு மரங்கள் பெருந்தோட்டங்கள், கட்டடம் மற்றும் அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் முப்பத்தைந்து பேர்ச் (0ஏ.0றூ.39பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் மாரவில காணிப்பதிவகத்தில் E29/5 இல் பதிவுசெய்யப்பட்டள்ளது.

மேற்கூறப்பட்ட லுணுவில கிராமத்தில் அமைந்துள்ள மேற்கூறப்பட்ட நிலவரைப்பட இல. 267P இல் துண்டு 74 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ள கிரிபட்டியான எஸ்டேட்டிலிருந்தும் அதற்குப் புறம்பாகவுமுள்ள சகலதும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காணியின் ஒரு பகுதி மரங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் ஒரு றூட் (0ஏ.1றூ.0பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் மாரவில காணிப்பதிவகத்தில் E29/6 இல் பதிவு செய்யப்பட்டள்ளது.

மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை அதே இடத்தில் 2008, யூலை 10 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**.- கொழும்பு சிலாபம் வீதி ஊடாக வென்னப்புவ நகரம் வரை சென்று லுணுவில வீதிக்குத் திரும்பி 47 வது மைல் கல்லுக்கு முன்னர் சுமார் 100 மீற்றர் செல்ல வேண்டும். லுனுவிலவிலுள்ள ரெயில்வே கடவையைத்தாண்டி 2.7 கி. மீ தூரம் சென்று (சீநோர் வீதியை நோக்கி) தெமட்டபிட்டிய வீதிக்கு இடதுபுறமாகத் திருப்பவும். 1 கி. மீ. தூரம் சென்றதும் சிரி கம்பளவீதிக்கு வலதுபுறமாகத் திரும்பவும். சுமார் 400 மீற்றர் சென்று 30 அடி அகலமுடைய கற்குழி வீதிக்கு இடதுபுறமாகத் திரும்பி இ. மி. ச. டிரான்ஸ்போமரின் இடதுபக்கமாகவுள்ள குறிப்பிட்ட காணியைச் சென்றடைவதற்கு சுமார் 100 மீற்றர் செல்லவும்.

### நான்காவது ஏல விற்பனை

வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள துவரகம் பலாத்தவில் கனதர கோரளையில் 2 - 3 E கிராம சேவகர் பிரிவில் அனுராதபுர நகர சபை எல்லைக்குட்பட்ட அனுராதபுரம் புதிய நகரின் கட்டம் 11 இல் அமைந்துள்ள வன்னியல்குளமகலே என்றழைக்கப் படுகின்ற காணியிலிருந்தும் அதற்குப் புறம்பாகவும் நில அளவையாளர் நாயகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட 1977, நவெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட இறுதி நகர நிலைவரைபடம் A3 இன் இல 102 மற்றும் 114 தாளில் காணித்துண்டு 540 எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட நிலவரைப்பட இல. A3 இல் குறிப்பிடப்பட்ட வீதி ஒதுக்கம் மீதான வழி உரிமை மற்றும் கட்டடம் மற்றும் அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் ஒரு ரூட் மற்றும் சைபர் நான்கு தசம் ஆறு மூன்று பேர்ச் (0ஏ. 1றூ. 04.63பே) விஸ்தீரணத் தைக்கொண்டுள்ள சகல காணித்துண்டும் அனுராதபுரம் காணிப் பதிவகத்தில் ஏ 344/322 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை அதே இடத்தில் 2008 யூலை 15 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**.- அனுராதபுரம் நகரநிலையத் திலிருந்து ஆஸ்பத்திரி வீதியாகச் சென்று ஆஸ்பத்திரி எதிரேயுள்ள புலன்குளம் திஸாவ மாவத்தைக்கு வலதுபுறமாகத் திரும்பி இந்த வீதியில் சுமார் 500 மீற்றர் சென்று புலன்குலம திஸாவ முதலாவது ஒழுங்கைக்கு வலது புறமாக திரும்பவும். இக்காணி வீதி, முகப்பாக சுமார் 20 மீற்றர் தூரத்தில் இடதுபுறமாக அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 15.02.2008 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானி மற்றும் 05.02. 2008 ஆந் திகதியுடைய ''டெயிலிமிரர்'' மற்றும் ''லங்காதீப'' பத்திரிகையையும் 12. 02. 2008 ஆந்திகதி ''வீரகேசரி'' பத்திரிகையையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

**கட்டணம் செலுத்தும் விதம்** :

(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%) ;
(2) விற்பனைவரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% மும் ;
(3) ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் 2.5 % மும் ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000 உம் ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனம் ரூபா 500/-;
(6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு.

கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பிஎல்சி இல் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி ஒப்பினை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பார்வையிடவும் பெறவும் முடியும் :- ''உதவிப் பொது முகாமையாளர் - (சட்டம்) செலான் வங்கி பிஎல்சி சிலிங்கோ செலான் கோபுரம், இல. 90, காலி வீதி, கொழும்பு 3'' - தொலைபேசி : 2456285, 2456263, 2456284

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

துசித கருணாரத்ன,
அனுமதிபெற்ற ஏலதாரர்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ
தொலைபேசி இல. : 2696155, 2572940

6-620/2

**செலான் வங்கி பி. எல். சி. – மாலபே கிளை**

*1990 ஆம் ஆண்டின் வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் 4 ஆம் இலக்க சட்டத்தின் (விஷேட சரத்துக்கள்) 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதி வாய்ந்த காணியின் ஏல விற்பனை**

**மேல் மாகாணம் கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளையின் பல்லேபத்துவிலுள்ள ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைக்குட்பட்ட நாவலையில் அமைந்துள்ள லியனகே மாவத்தை தற்போது இல. 8/22 , வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்டுள்ள அளுபோகவத்தை அல்லது கொடஉடவத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் (அனுமதிபெற்ற நில அளவையாளர் எச். டொன் டேவிட் என்பவரால் தயாரிக்கப்பட்ட 17.09.1951 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 4551 இல் துண்டு A எனக் குறிப்பிடப்பட்ட காணியிலிருந்தும் மற்றும் அதற்குப் புறம்பாகவும் ஒரு பகுதியாகிய மேற்கூறப்பட்ட காணித்துண்டு 12 அனுமதிபெற்ற நில அளவை யாளர் டி. ஏ. மென்டிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 03.10.1970 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1507 குறிப்பிடப்பட்டுள்ள மீள அளவையீடு செய்யப்பட்ட துண்டு 12 இன் ஒரு உப பிரிவாக விளங்குகின்றது.) அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பி. கே. பி. ஒக்கென்தஸாவ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1988 மே 8 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 56/1988 இல் குறிப்பிடப்பட்ட துண்டு $12^1$ குறிப்பிடப்பட்ட சகலதும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட காணித்துண்டு $12^1$ மேற்கூறப்பட்ட நில வரைப்பட இலக்கம் 56/1988 இற்கமைய அங்கு காணப்படுகின்ற கட்டடம் மரங்கள் பெருந்தோட்டங்கள் மற்றும் அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் பதினொரு பேர்ச் (0ஏ. 0ரூ. 11பே.) விஸ்தீரணத் தைக் கொண்டுள்ளதுடன் கல்கிஸ்சை காணிப்பதிவகத்தில் தலைப்பு எம் 1369/239 இன் கீழ் தற்பொழுது எம் 2633/136 இற்குக் கொண்டுசெல்லப்பட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

*(கடன்பட்டோர் என்றவகையில் அத்துருகிரியவைச் சேர்ந்த குசான் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பிஎல்சிக்கு ஈடு வைக்கப்பட்ட சொத்து.)*

மேலே விவரிக்கப்பட்டுள்ள காணியை நான் பகிரங்க ஏலத்தின் மூலம் 2008, யூன் 26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற முறை.**– பொரளையிலிருந்து கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை (கொட்டாவ வீதி) அல்லது டட்லி சேனநாயக்க மாவத்தை (காசல் வீதி) ஊடாகப் பிரயாணம் செய்து ஆயுர்வேத போதனா வைத்தியசாலையைத் தாண்டி வெலிக்கட சந்தி வரை சுமார் 1 1/2 மைல் தூரம் சென்று நாவல வீதிக்கு வலதுபுறமாகச் செல்லவும். இந்த வீதி ஊடாக கொஸ்வத்த சந்தியிலிருந்து கிரிமண்டல மாவத்தைக்குச் சற்று முன்னர் 1 1/4 மைலை விட சற்று குறைவாகச் சென்றதும் வலது புறமாக லியனகே மாவத்தையினுள் செல்லவும். இந்த வீதியில் சுமார் 75 யார் குறுகிய தார் வீதியில் சென்ற பின்னர் வலதுபுறமாகத் திரும்பவும். குறிப்பிட்ட காணி வலது பக்கத்தில் மற்றுமோர் 25 யார் தூரத்தில் வரி மதிப்பீட்டு இல. 8/22 ஏ ஐக் கொண்டுள்ளது.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு 2008.01.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2008.01.07 ந் திகதிய டெயிலி மிரர் மற்றும் லங்காதீப பத்திரிகைகளையும் 2008.01.10 ஆந் திகதி வீரகேசரி பத்திரிகையையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**– வெற்றிகரமான கொள்வனவு தாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்காணும் தொகைகளைக் காசாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%)
(2) விற்பனைவரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% மும் ;
(3) ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் 2.5 % மும் ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000 உம் ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனம் ரூபா 500/-;
(6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு.

கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பிஎல்சி இல் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி ஒப்பினை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''உதவிப் பொது முகாமையாளர் - (சட்டம்) செலான் வங்கி பிஎல்சி சிலிங்கோ செலான், இல. 90, காலி வீதி, கொழும்பு 3'' பார்வையிடவும் பெறவும் முடியும் என்ற முகவரியில் பார்வையிடவும் வங்கி பிஎல்சி என்ற முகவரியில் - தொலைபேசி : 2456285, 2456263, 2456284

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

துசித கருணாரத்ன,
அனுமதிபெற்ற ஏலதாரர்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ
தொலைபேசி இல. : 2696155, 2572940

6-60/1

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் IV பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 3,360.00 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

### அட்டவணை - 2008

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 06.06.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.05.2008 |
| | | வெள்ளி | 13.06.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.05.2008 |
| | | வெள்ளி | 20.06.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.06.2008 |
| | | வெள்ளி | 27.06.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.06.2008 |
| **யூலை** | .. | வெள்ளி | 04.07.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.06.2008 |
| | | வெள்ளி | 11.07.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.06.2008 |
| | | வெள்ளி | 18.07.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.07.2008 |
| | | வெள்ளி | 25.07.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.07.2008 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 01.08.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.07.2008 |
| | | வெள்ளி | 08.08.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.07.2008 |
| | | வெள்ளி | 15.08.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.08.2008 |
| | | வெள்ளி | 22.08.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.08.2008 |
| | | வெள்ளி | 29.08.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.08.2008 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.